**இலங்கை கைப்பணிகள் சபை - 2023**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கைப்பணிகள் சபையின் (“சபை”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் 12, 46, 58 மற்றும் 77 ஆம் பந்திகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருமான வரி கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வருமான வரி கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | இரண்டு ஊழியர்களினால் சபைக்கு எதிராக தொடரப்பட்ட இரண்டு வழுக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 84 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் வெளிப்படுத்தப்படும். | இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபாரக் கடன் பட்டோர் மீதி ரூபா 16,229,979 ஆக இருந்ததுடன் அதில் 03 இற்கும் 12 வருடங்களுக்கும் இடையில் காணப்படுகின்ற ரூபா 11,864,738 தொகையை அறவிடுவதற்கு முடியாத கடன் பட்டோர் மீதிக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 9 இன் 5.4.4 மற்றும் 5.5 ஆம் பந்திகளின் பிரகாரம் அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறைமையில் பழைய மீதிகள் உரிய பிரகாரம் உள்ளடக்கப்படாமை மற்றும் கடன்பட்டோருக்கு உரிய பட்டியல்கள் தீர்த்து வைக்கப்பட்ட போதும் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு தவறியிருந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் இந்த மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அறவிட முடியாக் கடன் ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டின் போது பிரதேச அபிவிருத்தி | பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் அமைச்சின் | வட்டியைப் பதிவழிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வங்கியில் இருந்து பெறப்பட்ட ரூபா 200 மில்லியன் கடன் தொகையில் ரூபா 158,399,824 மற்றும் செலுத்தப்படாத வட்டி ஒன்று சேர்ந்தமையால் மூலதனமாக்கப்பட்ட கடன் வட்டி மீதி ரூபா 12,609,762 தொகை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியதாகக் காணப்பட்டதுடன் அதற்குரிய ரூபா 18,534,346 ஆன மீளாய்வாண்டின் வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அப்பெறுமதியால் இலாபம் அதிகரித்தும், நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் சில வருடங்களில் சலுகை வட்டி பதிவழிப்பதற்கும், மாற்றமடைந்த வட்டி விகிதத்தை அகற்றுவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டுக்குரிய வட்டியைக் கணிப்பிடுதல் அல்லது மீண்டும் செலுத்தல் தொடர்பாக குறிப்பிடப்படாமையினால் 2023 இன் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. | எழுத்து மூல இணங்கப்பாடு ஒன்று காணப்படாமையினால் செலுத்தப் படவேண்டிய வட்டியை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பௌதீக இருப்பு மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட ரூபா 6,804,182 இருப்புப் பற்றாக்குறையைக் கணக்கீடு செய்வதற்கும் நட்டத்தை மேவுகை செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் அப் பெறுமதியால் இருப்பு மீதி மற்றும் ஆண்டின் இலாபம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பித்து உரிய கணக்கு நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்புப் பற்றாக்குறையைக் கணக்கீடு செய்வதற்கும், நட்டத்தை மேவுகை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பௌதீக இருப்பு சரியாக மெய்மையாய்வு செய்யப்படாமை மற்றும் இருப்புத் தொடர்பாக கணக்கீட்டு முறைமையில் காணப்படுகின்ற இணக்கமின்மையின் காரணமாக நிதிக் கூற்றுக்களில உள்ளடக்கப்பட்ட ரூபா 196,543,310 ஆன இருப்பு கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பௌதீக ரீதியில் காணப்படுகின்ற இருப்பை ஒப்பீடு செய்து 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் முன்னைய ஆண்டின் சீராக்கத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இருப்பினை சரியாக பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் பொறிகள், இயந்திரங்கள் மற்றும் தளபாட பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்களின் இழிவுப் பெறுமதி முறையே ரூபா 2,206,496 இனாலும், ரூபா 4,362,015 இனாலும் விஞ்சி பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியும் மற்றும் இலாபம் ரூபா 6,568,511 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சரியான பெறுமதி இனங்காணப்படல் வேண்டும். |
| (உ) | இணங்கப்பட்ட வாடகை உடன்படிக்கை 03 இணை அமுல்படுத்தாமையினால் கணக்கீடு செய்யப்பட்ட உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,505,000 பெற வேண்டிய மீதியில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்யப்படாத ரூபா 1,505,000 பெறுமதிக்கு உரிய ஆலோசனை பணிப்பாளர் சபையின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய மீதியை சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்கின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 220,031,513 | 64,369,755 | 155,661,758 | 2024 ஆம் ஆண்டில் ஏனைய சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் வேறுபாடுகளுக்கு உரிய இணக்கங்களை மேற்கொண்டு தேவையான சரிசெய்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரேஸ் கோஸ் காட்சிக் கூடத்திற்காக 2012 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 3,701,025 வைப்புத் தொகையை மீண்டும் அறவிடப்படாதிருந்த போதும் கணக்குகளில் பெற வேண்டியவையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வைப்பு மீளச் செலுத்தாத (Non Refundable) ஆக கணக்குகளில் காண்பிப்பதற்கு 2024 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அருங்காட்சியக வளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 2023 நவம்பர் மாதம் அகற்றப்பட்ட லக்சல காட்சிக் கூடத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக சபை செலவிட்ட செலவினத்திற்குப் பதிலாக அருங்காட்சியக திணைக்களத்தில் இருந்து ரூபா 107,548,197 தொகை கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட போதும் அது இதுவரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | தேசிய அருங்காட்சியக திணைக்கள வளவில் கட்டிடம் ஒன்றில் நடாத்திச் செல்லப்பட்ட லக்சல நினைவு பொருள் விற்பனை கடை அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அகற்றப்பட்டிருந்தது. அதன் போது அந்த திணைக்களத்தில் இருந்து அறவிட வேண்டியிருந்த நிலுவை வாடகை மற்றும் மின்சாரக் கட்டணம் மற்றும் லக்சல நிறுவனத்தால் கட்டிடத்தில் அபிவிருத்திக்கு முதலீடு செய்யப்பட்ட தொகைகளுக்கு இடையே சீராக்கப்பட்டு இந்த சபையில் கணிப்பீட்டின் பிரகாரம் ரூபா 107,548,197 தொகை லக்சல இற்கு கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட போதும் அந்த திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட தொகை ஏற்றுக்கொள்ள முடியாமையினால் அடுத்து வரும் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு உரிய தகவல்களைச் சமர்ப்பித்து தீர்மானம் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஏற்பட்ட செலவினங்களை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | காலி உணவட்டுன சலுசல நிறுவனத்திற்கு உரியதாகக் காணப்பட்ட 01 ஏக்கர் 30.6 பேர்ச் காணி மற்றும் கட்டிடம் 2012 ஒக்தோபர் 11 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 12/1523/553/020 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் பெறுவனவு நிராகரித்தலாகக் கருதி சபையினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 15,248,575 செலுத்தப்பட்டிருந்த போதிலும் லங்கா சலுசல நிறுவனம் இந்தக் காணியை மீண்டும் 2023 செப்தெம்பர் 22 ஆந் திகதி ரூபா 25,000,000 தொகையில் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு கையளித்திருந்தது. அதன் போது நிறுவனம் பெறுவனவை நிராகரித்ததாக செலுத்தப்பட்ட பெறுமதி சலுசல நிறுவனத்தில் இருந்து அறவிடுவற்கு 2024 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வ/ப லங்கா சலுசல நிறுவனத்தால் மேற்கூறப்பட்ட ஆதனங்களுக்கு உரியதாக வழக்கு நடவடிக்கைகள் காணப்படுவதாகக் காண்பித்து இந்த சபைக்கு அந்த ஆதனத்தை உரிய பிரகாரம் கையளிக்கப்படாது இருந்ததுடன் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் அதனைக் கையளித்தல் சட்ட ரீதியான உரித்து உறுதியின் மூலம் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. லங்கா சலுசல இற்கு செலுத்தப்பட்ட ரூபா 15,248,575 இலங்கை கைப்பணிகள் சபைக்கு நேரடியாக வழங்குவதற்கம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சபைக்குச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 21 மற்றும் 23 ஆம் பிரிவுகள் | 2015 நவம்பர் 19 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி உத்தியோகத்தரில் இருவருக்கு வேலை நீக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் சபையில் ஒழுக்காற்று அதிகாரியினால் ஒழுக்காற்றுக் கட்டளை | ஒழுக்காற்று விசாரணையின் இறுதி பரிசோதனை அறிக்கை தொடர்பாக பணிப்பாளர் சபையால் இதுவரை தீர்மானம் எடுக்கப்படவில்லை. ஒருவருக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று | தாபன விதிக் கோவையின் II தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 21 மற்றும் 23 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒழுக்காற்றுப் பரிசோதனை தீர்மானத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொடரப்பட்டுள்ளதுடன் மற்றய உத்தியோகத்தரால் வத்தள தொழில் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் ரூபா 6,294,099 தொகை முறைப்பாட்டுத் தரப்பினருக்கு செலுத்தப்பட்டுள்ளது. | ஒழுக்காற்றுக் கட்டளை வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) (i) | இலங்கை சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் நிதிப்பிரமாணம் 396(ஈ) | ரூபா 444,346 பெறுமதியான 06 மாதங்களை விஞ்சிய விநியோகிக்கப்பட்ட 27 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் முறைமையில் உள்ள குறைபாடுகள் மற்றும் நிரந்தரமாக முறைமையை செயலிழந்தமையின் காரணமாக தரவுகளை நாளதுவரையாக்க முடியாதிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு கவனத்தில் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 6 மாதங்களை விஞ்சிய காசோலை தொடர்பாக இந்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 371(5) | 06 உத்தியோகத்தர்களால் பெறப்பட்டிருந்த ரூபா 572,490 ஆன செயல் நிமித்த முற்பணம் 30 நாட்கள் முதல் 252 நாட்களுக்கு இடையிலான கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்ததுடன் 06 உத்தியோகதர்களினால் பெறப்பட்ட ரூபா 483,000 முற்பணம் அடுத்து வரும் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தது. | தீர்த்து வைக்கப்படாத முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கும், தீர்த்து வைக்கப்படாத முற்பணத்திற்குரிய தரப்பினரிடம் இருந்து மாதாந்த சம்பளத்தில் அறவிடுவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் முன்கொண்டுவராத வகையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | முற்பணங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 502(2) மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய இலக்கம் DMA/2009(2) என்ற முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று நாளது வரையாக பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் 04 சொத்து வகைகளுக்கு உரிய ரூபா 178,345,544 ஆன கொள்வனவுகள் தொடர்பான தகவல்கள் சரியாக நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணிச் செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப் பட்ட பொது முயற்சிகளுக்கா ன செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தி | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 06 மாதங்கள் தாமதம் ஆகி 2023 ஆகஸ்ட் 05 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுட ன் வரைவு வருடாந்த அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | SAP ERP மென்பொருள் 2022 திசெம்பர் மாதம் முதல் 2023 மார்ச் மாதம் வரை முழுமையாக செயலிழந்ததன் காரணமாக தரவுகளை மீண்டும் உள்ளடக்குவதற்கு கணிசமான ஊதியம் ஒன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது புதிய முறைமை ஒன்று சபையில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையி ன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்பட ல் வேண்டும். |
| (ஈ) | 2022 இன் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி சட்டம் | சுய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த வரித் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,590,693 மேலும் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்டது. | இந்த நிலுவைப் பணம் எதிர் காலத்தில் மாதாந்தம் செலுத்தி வரி செலுத்துதல்களை நாளது வரையாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள து. | சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி சட்டத்தின் பிரகாரம் செலுத்துதல்கள் நாளது வரையாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 57,120,290 இலாபமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 99,040,670 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 156,160,960 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. விற்பனைக் கிரயம் ரூபா 132,218,213 இனாலும், நிர்வாக செலவினம் ரூபா 35,726,177 இனாலும், விற்பனை மற்றும் விநியோக செலவினம் ரூபா 38,359,101 இனாலும் அதிகரித்துச் சென்ற போதிலும் சபையின் வருமானத்தில் ரூபா 357,653,549 அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் துபாய் நாட்டில் நடைபெற்ற குளோபல் விலேஜ் கண்காட்சிக்காக அனுப்பப்பட்ட ரூபா 20,731,487 பெறுமதியான கைப்பணி பொருட்கள் மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களில் ரூபா 7,200,424 பெறுமதியான இரத்தினக்கல் மற்றும் ஆபரணப் பொருட்கள் மீள அனுப்பப்பட்டிருந்த போதிலும் அந்த பொருட்கள் அதிகாரம் பெற்ற முகவரினால் மீண்டும் சபைக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. உரிய கண்காட்சி விற்பனைப் பெறுமதியான ரூபா 13,531,064 இனால் 2024 பெப்ரவரி 05 கணக்காய்வு திகதி வரையிலும் ரூபா 2,706,213 சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர் உடன்படிக்கையில் 5:3:2 பிரிவு அங்கீகாரம் பெற்ற விற்பனை கணக்காட்சிக்கூடத்தில் நாளாந்த விற்பனைக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட போதும் அது தற்காலிக விற்பனை கண்காட்சிக்காக உரித்தல்லாது இருந்ததுடன் அதற்கான இணக்கப்பாட்டு ஆவணங்கள் அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எஞ்சியிருந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் இருப்பு மற்றும் பெற வேண்டிய பணம் என்பவற்றை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற செலுத்த வேண்டிய வரி (வருமான வரி, பொருளாதார சேவைகள் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பெறுமதி சேர் வரி) ரூபா 46,125,572 தொகை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு உரிய செலுத்த வேண்டிய நிறுத்தி | 2009 ஆம் ஆண்டு வரை சபையினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரித் தொகை தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் கைச்சாதிடப்பட்ட இணக்கப்படாட்டின் பிரகாரம் | செலுத்த வேண்டிய வரித் தொகையை தாமதம் இன்றி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தல் வரி ரூபா 1,494,183 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2011 முதல் 2022 வரை சபையின் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 9,295,157 மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | ரூபா 1,144,609 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | 1991 யூலை 05 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 670 என்ற வர்த்தமாணி மூலம் காலி விற்பனை கண்காட்சி கூடம் அமைந்துள் காணி மற்றும் இரண்டு மாடிக் கட்டிடம் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் சட்ட ரீதியான உரித்தை பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டு வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களின் சட்ட ரீதியான உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆதனங்களின் சட்ட ரீதியான இருப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எந்த ஒரு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படாமல் 2009 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ள கெசெல்வத்த செயற்திட்டத்திற்குச் சொந்தமான ரூபா 4,921,120 பெறுமதியான இயந்திரப் பொறிமுறைகள் மற்றும் கட்டிடம் பயனற்றுக் காணப்பட்டதுடன் அதன் பாதுப்புக்காகவும் வருடாந்தம் ரூபா 1,041,600 தொகை செலவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கெசெல்வத்த வளவில் பொருத்தமான வினைதிறனான செயற்திட்டம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணப்படுகின்ற வளங்களில் உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கோட்டை விற்பனை கண்காட்சிக்கூட கட்டிடத்தில் சதுர அடி 40,830 அளவான | எதிர்காலத்தில் நிதியேற்பாடு சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப வழங்கி இந்த | காணப்படுகின்ற வளங்களில் இருந்து உச்ச அளவிலான |

| | | |
|---|---|---|
| கட்டிட பகுதி உடைந்த நிலையில் காணப்பட்டதன் காரணமாக நீண்ட காலம் முதல் பயனற்றுக் காணப்பட்டதுடன் நவீன மயப்படுத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கட்டிடத்தின் அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு மேலதிக வருமானங்களை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |